1994 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 293, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

293–

மகளிர் நலவாழ்வு ஆணையம் அமைத்தல்

***20604-திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மாநில அளவில் மகளிர் நலவாழ்வு ஆணையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மத்திய அரசு கேட்டுக்கொள்ளாமலேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மகளிர் நலவாழ்வு ஆணையம் அமைத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லரசு, மத்திய அரசிற்கே வழிகாட்டக்கூடிய ஒரு சிறந்த அரசாகச் செயல்படுகிறது என்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை ஒரு சாட்சியாக, சான்றாக அமைந்திருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், மாநில அளவிலே, இந்த மகளிர் நலவாழ்வு ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில், அதனுடைய நோக்கங்களையும், அதிகாரங்களையும் பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஓய்வுபெற்ற நீதிபதி அவர்களை–மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்–திரு. செங்குட்டுவேலன் அவர்களைத் தலைவராக நியமித்திருக்கிறார்கள். இதில் ஏறத்தாழ 8 உறுப்பினர்கள் அலுவல் சாரா உறுப்பினர்களாகப் பணியாற்றுகிறார்கள். 2 சட்டமன்ற உறுப்பினர்களும் பணியாற்றுகிறார்கள். அலுவல் சார்ந்த உறுப்பினராக சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் பணியாற்றுகிறார்.

பெண்களுக்கு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள உரிமையைப் பாதுகாப்பது, குழுவின் பரிந்துரைகளை அவ்வப்போது அரசுக்குத் தேவையான சமயத்தில் அளித்து, பெண்களுக்கு நல்ல நிலையை ஏற்படுத்த வாய்ப்பு அளித்தல், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் இதர சட்டங்களிலுள்ள முரண்பாடுகளை அகற்றி, பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் விதத்தில் அவற்றைத் திருத்தியமைக்க ஆவன செய்தல், தக்க அதிகாரிகளை அணுகி பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அநீதிகளையும் களைவதற்குப் பாடுபடுதல், பெண் உரிமை மற்றும் பெண் பாதுகாப்புச் சட்டங்களின்படி, பெண்களுக்குச் சம உரிமை மற்றும் முன்னேற்றம் ஏற்பட பாடுபடுதல், பெண் கைதிகளுக்கு காவல் நிலையம் மற்றும் பாதுகாப்பு நிலையங்களில் தகுந்த பாதுகாப்பை அளிப்பது பற்றி, அந்தக் குழு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தல், பெண்கள் சம்பந்தமாக மத்திய அரசால் கொடுக்கப்படும் ஏனைய விவரங்களை மாநில அரசுக்கு அறிவித்தல் ஆகியவை எல்லாம் இவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பெண்கள் நலனைக் காக்கக்கூடிய வகையில், அவர்களுடைய உரிமைகளைக் காப்பதற்காக, இந்த நலவாழ்வு ஆணையம் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பெண்கள், இந்த ஆணையத்தை எவ்வாறு அணுகுவது ? இன்றைக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற ஒரு நல்ல அமைப்பை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்பற்ற கண்டுபிடிப்பாக, அகிலத்திற்கே வழிக்காட்டக்கூடிய அமைப்பாக இருக்கின்ற அந்த அமைப்போடு, இந்த ஆணையம் தொடர்பு கொண்டு, இந்த இரண்டிற்கும் ஒரு 'கோவார்டினேஷன்' உருவாக்கப்படுமா, ஒரு செயல்பாடு உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அந்த ஆணையம் அப்படித்தான் செயல்பட்டு வருகிறது. இதுவரை இந்த ஆணையம் மூன்று முறை கூடியிருக்கிறது. இது ஆங்காங்கு இருக்கிற பெண்கள் காவல் நிலையங்களில் பெண்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகளைப் பற்றிய தகவல்களையும் இதுதவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படுகிற மனுக்களின்மீது-பெண்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகள் பற்றிய மனுக்களின்மீது-இந்தக் குழு

தன்னுடைய நடவடிக்கையை எடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகளிடத்தில், அவற்றிற்கான நடவடிக்கைக்குரிய அனைத்துப் பரிசீலனையையும் செய்வதற்கு உத்தரவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் நலவாழ்வு ஆணையம் தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளதா ; இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நலவாழ்வு ஆணையம் கேரளத்திலும் இருக்கிறது ; கர்நாடகத்திலும் இருக்கிறது. ஆனால், தமிழகத்திலேதான் இதற்குரிய அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு இது செயல்பட ஆரம்பித்திருக்கிறது ; புரட்சித் தலைவி ஆட்சியிலேதான் செயல்பட ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் மகளிர் நலவாழ்வு மையம் அமைத்து, அந்த அனைத்து மையங்களும், மாநில அளவில் செயல்படும் மகளிர் ஆணையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, அந்தச் செயல்பாடுகள் சீரமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநில மகளிர் நலவாழ்வு குழுவில் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். அவ்வப்போது மகளிர் நலவாழ்வு குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், பெண்கள் காவல் நிலையங்கள் மூலமாகவும், காவல் துறை மூலமாகவும் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கின்ற காரணத்தினால் மாவட்ட அளவில் இது அமைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 294, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

294–

காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவரது திருவுருவச் சிலை அமைத்தல்

***35206–திரு. ஓ. எஸ். அமர்நாத்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடியில் உள்ள கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவருடைய திருவுருவச் சிலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கவியரசு கண்ணதாசனின் மார்பளவு வெண்கலச்சிலை ரூ. 23,500 செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. காரைக்குடியில் உள்ள கவியரசு கண்ணதாசன் மணிமண்டபத்தில் விரைவில் அவரது சிலை நிறுவப்படும்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தமிழ் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் கௌரவமும், மரியாதையும் செய்கின்றவகையிலே பசும்பொன் மாவட்டத்திலே பிறந்து வளர்ந்து, தமிழ்க் கலைஞர்களுக்கும், தமிழ்த் திரைப்பட உலகத்திற்கும் ஒரு சிம்மசொப்பனமாக விளங்கி, பாடல்களிலே தனக்கு என்று ஒரு தனி முத்திரையைப் பதித்துக் காட்டிய கண்ணதாசனுடைய திருவுருவச் சிலையை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்திலே, தமிழ்த் திரைப்பட உலகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த பல திரைப்படங்களிலே, பல பாடல்களை எழுதி, கொள்கைப் பாடல்களை எழுதி, மக்களுக்கு உதவி செய்த கவிஞர் கண்ணதாசன், 'சத்தியம் நீயே, தர்மத்தாயே குழந்தை வடிவே தெய்வ மகளே, குங்குமக் கலையோடு குலம் காக்கும் பெண்ணே, குணத்தில் பசு என்று சொல்வார்கள் கண்ணே, காலையிலே உன் முகம் பார்த்த பின்னே, தன் கடமை செய்வாள் எங்கள் தமிழ்நாட்டுப் பெண்ணே' என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அமர்நாத், அவருடைய பாடல் பூராவும் பாடினால், இந்த அவையிலே அதற்குத் தனியாக நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் அந்தக் கருத்தை மட்டும் சொன்னால் போதும்.